வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

# Field Work Centre

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | தமிழ் - I | நேரம் :- மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

**பகுதி I**

**அறிவுறுத்தல்கள்.**

❖ **பகுதி I இல் உள்ள இரு வினாக்களுக்கும் பகுதி II இல் உள்ளவற்றுள் எவையேனும் மூன்று வினாக்களுக்கும், எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**பகுதி – I**

**1) மேல்வரும் செய்யுளை வாசித்து அவற்றின் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.**

அ) அறுகுளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும்
உறுமிடத்து உதவாது உவர் நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாயானை கழற்கால் பேகன்
கொடைமடம் பாடுதல் அல்லது
படை மடம் படான் பிறர் படை மயக்குறினே!

I. செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் தெளிவாக எழுதுக.
II. செய்யுளின் திணை, துறை என்பவற்றை எடுத்துக் காட்டுக.
III. இதில் கையாளப்பட்டுள்ள அணியை எடுத்துக் காட்டி விளக்குக.

zigaram.lk

(3x4=12 புள்ளிகள்)

ஆ) நன்றெனப் புளிஞர் வேந்த னண்ணினன் றமரை நாவாய்
சென்றுநீர் தருதி ரென்ன வந்தன சிவன் சேர் வெள்ளிக்
குன்றெனக் குனிக்குமம் பொற் குவடெனக் குபேரன் மானம்
ஒன்றென நாணிப் பல்வேறுருவு கொண்டனைய வான

I. இச் செய்யுள் இடம் பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக.
II. புளிஞர் வேந்தன் எனக் குறிப்பிடப்படுபவன் யார்? அவனது செயல் யாது?
III. செய்யுளில் நாவாய்களின் தோற்றம் எவ்வாறு வர்ணிக்கப்படுகிறது?

(3x4=12 புள்ளிகள்)

**2)** “அ” பகுதியிலுள்ள கவிதையை படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

**அல்லது**

“ஆ” பகுதியிலுள்ள உரைப் பகுதியைப் படித்து அதன் கீழ் உள்ள வினாக்களுக்கு விடை தருக.

மானிடத் தன்மையைக் கொண்டு – பலர்
வையத்தை ஆள்வது நாம் கண்டதுண்டு
மானிடத் தன்மையை நம்பி - அதன்
வன்மையினாற் புவி வாழ்வு கொள் தம்பி !

"மானிடம்" என்றொரு வாளும் - அதை
வசத்தில் அடைத்திட்ட உன்னிரு தோளும்
வானும் வசப்பட வைக்கும் - இதில்
வைத்திடும் நம்பிக்கை வாழ்வைப் பெருக்கும்

மானிடன் வாழ்ந்த வரைக்கும் - இந்த
வையத்திலே அவன் செய்தவரைக்கும்
மானிடத் தன்மைக்கு வேறாய் - ஒரு
வல்லமை கேட்டிருந்தால் அதைக் கூறாய் !

மானிடமென்பது புல்லோ ! – அன்றி
மரக்கட்டையைக் குறித்திட வந்த சொல்லோ?
கானிடை வாழ்ந்ததும் உண்டு – பின்பு
கடலை வசப்படச் செய்ததும் அதுதான் !

மானிடம் போற்ற மறுக்கும் - ஒரு
மானிடம் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்
மானிடம் என்பது குன்று – தனில்
வாய்ந்த சமத்துவ உச்சியில் நின்று

மானிடர்க் கினிதாக - இங்கு
வாய்ந்த பகுத்தறிவாம் விழியாலே
வான்திசை எங்கணும் நீ பார் ! வாழ்வின்
வல்லமை "மானிடத் தன்மை" என்றே தேர்

I. மானிடசக்தியின் ஆற்றல்கள் எவை என ஆசிரியர் வலியுறுத்துகின்றார்?
II. "மானிடம் போற்ற மறுக்கும் ஒரு மானிடம் தன்னைத் தன் உயிரும் வெறுக்கும்" என்ற வரிகளினூடாக கவிஞர் உணர்த்த விரும்பும் கருத்தைத் தெளிவு படுத்துக.
III. ஆசிரியரின் கவிதை மொழி நடை பற்றி கருத்துரைக்குக.
IV. கவிதையில் கவிஞர் கையாண்டுள்ள அணிப் பிரயோகத்தை எடுத்து விளக்குக.

(4x4=16 புள்ளிகள்)

agaram.lk

**அல்லது**

ஆ மனோ – அவள் என்னை ஏமாத்திப் போட்டாள் ஏமாத்துக்காரி விட்டிட்டு ஓடித் தொலைஞ்சு போனாள் வருத்தமெண்டு சொல்லி என்னை டாக்ற்றரிட்டை அனுப்பினது என்னத்துக்கெண்டு எனக்கு விளங்கேல்ல இப்ப விளங்குது எல்லாம் பஞ்சாட்சரத்தோட ஓடிப்போறத்துக்காகத்தான் என்னை அனுப்பினாள் டாக்ற்றரிட்டை

(டாக்ற்றருக்குக் கிட்டப்போய்)

என்னைக் கைவிட்டிட்டாள் ஓடிப்போட்டாள் ஏமாத்திப் போட்டாள் ஏன் எடி உனக்கு இந்தப் பொய்? ஏன் இந்த பசப்பும் பாசாங்கமும்? ஏனிந்த சூதும், சதியும், கைகேகித்தனமும்? என்ன தீமையப்பா நான் உனக்குச் செய்திருப்பன் ஒரு துரோகம் நினைச்சிருப்பேனா? ஏனப்பா நீ இந்த மாதிரி நீ செய்தாய் (டாக்ற்றரிடம்) அவள் ஓடிப் போய் விட்டாள் டாக்ற்றர் என்னை விட்டிட்டு ஓடிப்போயிட்டாள் டாக்ற்றர்.

(கண்ணீர் முட்டுகிறது மனோகரனுக்கு ஆத்திரமும் துயரமும் போட்டி போடுகின்றன.)

கந்தப்பு :- ஆ……….. ஆ …………… வருத்தக்காரி எங்கை?

மனோ :- வருத்தக்காரி …………. வருத்தக்காரி அவள் வருத்தக்காரி இல்லை எங்கேயோ கிடந்த மூதேசி. என்ன கேவலம் என்ன எளியதனம், கொடும் பாவி இதைப்போல ஒரு சூழ்ச்சி செய்யிற புத்தி பேய் பிசாசுக்குக்கூட வராது என்னை உங்களிற்றை அனுப்பினவள் வருத்தமெண்டு சொல்லி உண்மையான நோக்கம் அந்த நாய்ப்பயல் பஞ்சாட்சரத்தோட அவளின்ர கள்ளப் புரியனோட ஓடுறத்துக்கு ஐயோ ! கடவுளே இதிலும் பார்க்க நான் செத்திருக்கலாம் இந்த அதிர்ச்சியிலிருந்து எனக்கு மீட்சி இல்லை ஒரு காலமும் இல்லை

கந்தப்பு :- மன்னிக்கவேணும் மிஸ்ரர் மனோகரன் இதெல்லாம் என்ன? என்ர பிள்ளை செத்துப்போச்சு என்ர மனிசி வீட்டில துக்கமும் துன்பமுமாய் அழுதபடியே இருக்குது. எனக்கு ……. எனக்கு …… நிக்கவே முடியாதபடி களைப்பாயும் சோர்வாயும் இருக்கு மூண்டு நாளாய் இரவு பகலாய் எனக்கு நித்திரை இல்லை இப்படியெல்லாம் இருக்க நீர் ….. நீர் என்ன செய்யிறீர் வேடிக்கை காட்டிறீர் ஏதோ ஒரு படுமோசமான உம்மிடை கோமாளிக்கூத்துக்குப் பக்க வாத்தியம் வாசிக்கச் சொல்லி என்னைக் கேக்கிறீர் இல்லை ……. இல்லை பக்கவாத்தியம் வாசிக்கிறது என்றாக் கூடப்பரவாயில்லை உம்மட கூத்து மேடைக்குப் பந்தல் காலாய் நிண்டு சுமக்கச் சொல்லிறீர் எனக்கு …. எனக்கு ஒண்டுமே விளங்கேல்.

I. மனோகரனின் ஏமாற்றத்தை ஆசிரியர் எவ்வாறு வெளிப்படுத்துகின்றார்?

II. மனோகரனின் மனைவியின் செயற்பாடு அவனது மனதில் எத்தகைய தாக்கத்தை உண்டு பண்ணியது?

III. மனோகரனின் ஏமாற்றத்தை விட கந்தப்புவின் துன்பம் இங்கு பெரிதாக கொள்ளப்படுமாற்றினை எடுத்துக்காட்டி விளக்குக?

IV. அ. உம்மட கோமாளிக் கூத்துக்கு பக்கவாத்தியம் வாசிக்கச் சொல்லிக் கேக்கிறீர்
ஆ. உம்மிடை கூத்து மேடைக்கு பந்தல் காலாய் நிண்டு சுமக்கச் சொல்லிறீர் பின்வரும் தொடர்கள் மூலம் ஆசிரியர் எதனை வெளிப்படுத்தி நிற்கின்றார்?

(3x4=12 புள்ளிகள்)

## பகுதி II

**3)** இடனறிதல் என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியவற்றை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றைக் தெரிவு படுத்துக.
அ) பகைவரின் அரணை அடையக் கருதிய அரசன் அதற்கேற்ற இடத்தை அறிதல்
ஆ) போர் செய்வதற்கான இடத்தை அறிதல்.
இ) பகைவரைச் சென்றடையக் கூடாத இடமும் அவ்விடத்தில் சென்று போரிடின் ஏற்படும் குற்றமும்
ஈ) இவ் அதிகாரத்தில் கையாளப்பட்டுள்ள அணிச் சிறப்பு.

(4x5=20 புள்ளிகள்)

agaram.lk

**4)** குகப்படலத்தில் குகன் நாவாயில் ஏறி தனியே கங்கையின் வடகரை வந்து சேர்ந்து பரதனைச் சந்தித்து கங்கையின் தெனகரை சேர்க்குமாறு குகனைப் பரதன் வேண்டியது வரையுள்ள பகுதியை ஆதாரமாகக் கொண்டு பின்வருவனவற்றை விளக்குக.
அ) பரதனும் குகனும் ஒருவரை ஒருவர் சந்தித்துக் கொள்ளல்.
ஆ) பரதன் இராமனிடம் கொண்ட பேரன்பு
இ) இலக்குமணன் நிலை பற்றி குகனிடம் வினாவுதல்
ஈ) அணிகளைக் கையாண்ட சிறப்பு (6+6+4+4 =20 புள்ளிகள்)

**5)** ஒரு வெண்மனற் கிராமம் காத்துக்கொண்டிருக்கிறது என்ற நாவலில்
அ) ஆலங்கேணி மக்களின் பண்பாடு
ஆ) நாவலின் தலைப்பிற்கேற்ப "காத்திருப்பு" எவ்எவ் வழிகளில் அமகிறது என்பவற்றை விக்குக.

(10+10=20 புள்ளிகள்)

**6)** நெருக்கடி என்ற சிறுகதையூடாகப் பின்வருவனவற்றை விளக்குக.
அ) சரவணமுத்து குடும்பத்தின் வறுமை நிலை
ஆ) சரவணமுத்து என்ற பாத்திரச் சித்தரிப்பு
இ) கதாசிரியரின் மொழிநடை

(7+6+7=20 புள்ளிகள்)

**7)** பேராசிரியர் அ.சீனிவாசராகவனின் இலக்கிய விமர்சனம் எனும் கட்டுரையினூடாக பின்வருவனவற்றை விளக்குக.

அ) தமிழில் இலக்கிய விமர்சனம் பற்றிய கட்டுரையாசிரியரின் கருத்துக்கள் யாவை?

ஆ) ஆசிரியர் விபரிக்கும் இலக்கிய விமர்சன வகைகள் எரவ?

இ) கட்டுரையாசிரியரின் எடுத்துரைப்பு முறை?

8+6+6=20 புள்ளிகள்)

**8)** பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விளக்குக.

அ) அமலனாதிபிரான் பதிகத்தில் திருமால் மீதான திருப்பாணாழ்வாரின் பக்கிதியுணர்வு நிலை

ஆ) மணிமேகலா தெய்வம் வந்து தோன்றிய காதையில் மாலைக் காட்சிவ ர்ணிக்கப்படும் சிறப்பு

இ) தேம்பாவணி காட்சிப் படலத்தில் யேசுவைக் கண்ட இடையர்களின் நிலை

ஈ) காரண மலையில் மக்கமாநகரின் அருட் சிறப்பு

உ) பாரதியின் கண்ணம்மா என் காதலி என்ற கவிதையில் அவரது காதல் உணர்வு வெளிப்படுமாற்றை விளக்குக.

(2x10 =20 புள்ளிகள்)

agaram.lk

**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, மார்ச் - 2019
## Term Examination, March - 2019

| தரம் :- 13 (2019) | தமிழ் II | நேரம் :- மூன்று மணித்தியாலம் |
|---|---|---|

**அறிவுறுத்தல்கள் :**

❖ **பகுதி I இல் உள்ள மூன்று வினாக்களையும் பகுதி II இல் உள்ள எவையேனும் இரண்டு வினாக்களுக்கும் எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

**பகுதி I**

**01) அ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

❖ மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1) பின்வருவனவற்றுள் முதல் எழுத்து?
1) அ,க் 2) கா,ச் 3) சே,ம 4) ஆ,சி 5) ஞ்,பு ( )

2) பின்வருவனவற்றுள் நாமடி ஒலிகள் எவை?
1) ற,ட,ன 2) ழ,ல,ட 3) ட,ண,ன 4) ர,ல,ட 5) ர,ற,ண ( )

3) வேற்றுநிலை மெய்மயக்கமாக மட்டும் வரும் எழுத்துக்கள்?
1) க்,ச்,த்,ப் 2) ர்,ழ் 3) க்,ச்,ர் 4) ப்,ள்,ர் 5) ழ்,ள் ( )

4) நெடிற்றொடர் குறியலுகரம் அமைந்துள்ள சொல்?
1) தராசு 2) பலாசு 3) விறகு 4) காசு 5) விடாது ( )

5) பின்வருவனவற்றுள் ஒன்றுக்கு மேற்பட்ட விகுதி இடம் பெற்றுள்ள சொல்?
1) பொரியல் 2) பூனையை 3) ஏற்றுமதி 4) மாடுகள் 5) மாடுகளை ( )

6) வினையும் பெயரும் சேர்ந்து வரும் கூட்டுப் பெயராக அமைவது?
1) சுடுசோறு 2) அறிக்கை 3) ஏற்றுமதி 4) அடிபடு 5) கைவிடு ( )

7) பின்வருவனவற்றுள் வினையாலணையும் பெயராக அமைந்த சொல்?
1) போக்கு 2) போனது 3) போதல் 4) போனவன் 5) போனமை ( )

8) பின்வருவனவற்றுள் எண்ணுப் பெயர் அடியாகப் பிறந்த உயர்திணைப் பெயர்?
1) அறிஞர் 2) ஊரார் 3) ஐவர்
4) இலங்கையர் 5) மாதர் ( )

9) "செய்யாதீர்" இச் சொல் பற்றிய பொருத்தமான இலக்கண விளக்கம்
1) முன்னிலை ஏவல் வினை முற்று 2) முன்னிலை பன்மை வினைமுற்று
3) முன்னிலை எதிர் மறை ஏவல் வினைமுற்று 4) எதிர் மறை ஏவல் வினை முற்று
5) வியங்கோள் வினை முற்று ( )

10) பின்வருவனவற்றுள் கூட்டுப்பகுதி இடம் பெற்றுள்ள சொல்?
1) பாடினான் 2) கவிஞர் 3) அண்ணன்மார்
4) குருவிகள் 5) குருவிக் கூடுகள் ( )

11) பின்வருவனவற்றுள் செயப்படு பொருள் குன்றிய வினையாகவும் செயப்படு பொருள் குன்றாத வினையாகவும் வரும் வினை?
1) எரி 2) நட 3) கல் 4) ஓடு 5) எழுது ( )

agaram.lk

12) “சிறுவர்பாடசாலை” என்பது?
1) 6ஆம் வேற்றுமைத் தொகை
2) 4ஆம் வேற்றுமைத் தொகை
3) 5ஆம் வேற்றுமைத் தொகை
4) 2ஆம் வேற்றுமைத் தொகை
5) 7ஆம் வேற்றுமைத் தொகை ( )

13) எதிர்காலப் பெயரெச்சமாக அமைந்த சொல்?
1) வரும் 2) நின்ற 3) ஓடுகிற 4) செய்த 5) கண்ட ( )

14) பின்வருவனவற்றுள் காரண வினையாக அமைந்த சொல்?
1) உருள் 2) உருட்டு 3) உருட்டுவி 4) உருண்டு 5) உருட்டி விட்டேன் ( )

15) “பார்” முதல் வினையாக அமைந்த தொடர்?
1) அவன் பார்த்தான்
2) அவள் படம் பார்த்தாள்
2) அவன் ஏமாற்றப் பார்த்தான்
4) அவன் தப்பிக்கப் பார்த்தான்
5) அவன் போட்டுப் பார்த்தான் ( )

16) அழகுள்ள மலர் கொண்டு வருவான் என்பதில் வந்துள்ள அடைமொழி?
1) பெயரடைமொழி 2) வினையடை மொழி 3) அடுக்குப் பெயரடை
4) ஆக்கப் பெயரடை 5) தனிப்பெயரடை ( )

17) ஆணும் இல்லை பெண்ணும் இல்லை என்பதில் “உம்” எனும் இடைச் சொல் உணர்த்திய பொருள்?
1) எதிர்மறை 2) ஐயம் 3) எச்சம் 4) முற்று 5) தெரிநிலை ( )

18) பின்வருவனவற்றுள் உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல்?
1) கல்லால் 2) பூனையை 3) கதவால் 4) மரவேர் 5) அவரை ( )

19) வானம் இருண்டிருக்கிறது இன்று மழை பெய்யும் இவ்விரு வாக்கியத்தையும் இணைப்பதற்கு பொருத்தமான இனைப்பிடைச் சொல்?
2) ஆனால் 2) என்னும் 3) ஆகவே 4) என்ன 5) ஆனாலும் ( )

20) “எமது பாடசாலை அடுத்தவருடம் அமுதவிழாவைக் கொண்டாடுகின்றது” இதில் அமுதவிழா எத்தனை ஆண்டு நிறைவில் கொண்டாடப்படுகின்றது?
1) இருபத்தைந்து 2) முப்பது 3) அறுபது 4) எண்பது 5) எழுபத்தைந்து ( )

(20x1=20 புள்ளிகள்)

**02) பின்வரும் உரைப்பகுதியை வாசித்து 50 சொற்களில் சுருக்கி எழுதுக.**
எழுத்துக்கள் சில சேர்ந்து சொற்களாக அமைகின்றன.

அவ்வாறு சொற்கள் அமையும் முறையில் எளிமையும் உண்டு, அருமையும் உண்டுதிராவிட மொழிகளில் எளிமையே காணப்படுகின்றது. ஒலித்தற்கரிய கூட்டொழிகளையும் ஒலியமைப்பிற்குக் கூடா ஒலிகளையும் திராவிட மொழிகள் ஒதுக்கி வந்திருக்கின்றன. உயிரும் மெய்யும் சேர்ந்து ஒலித்தற்கு எளியனவாக உள்ள அசைகளே சொற்களாக அமைந்துள்ளன. “த்வ” முதலான கூட்டொலிகள் “தத்வம்” முதலிய சொற்களில் உள்ளன. அத்தகைய வடமொழிச் சொல், தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளில் காணப்பட்டாலும் அவற்றை அந்த மொழிகளின் இயற்கையான ஒலிகளாகக் கருதலாகாது பிறமொழியின் சொற்களை அவ்வாறே ஏற்றுக் கொள்ளுவதால் அக்கூட்டொலிகள் அம் மொழிகளில் காணப்படுகின்றன. பிறமொழிச் சொற்களை அவ்வாறே ஏற்றுக் கொள்ளாமல் திராவிட ஒலிமுறைக்கேற்ப அமைத்துக் கொள்ளும் மொழி தமிழே தமிழ் மொழியில் பழைய திராவிட மொழியின் ஒலியமைப்பு இன்னும் மாறாமல் இருந்து வரக் காரணம் அதுவே.

சொல்லின் முதலில் உயிரேனும் மெய்யேனும் வருதல் உண்டு. தமிழ் மொழியில் உள்ள பன்னிரண்டு உயிரும் மொழி முதலாக வரும் மெய் எழுத்துக்களில் கசதநபமவயஞ என்பவை முதலில் வருவன ஏனைய மொழி முதலில் வராக் காரணம் அவை முதலில் ஒலித்தற்கு அரிய ஒலிகளாக இருத்தலே யாகும்.

(13 புள்ளிகள்)



agaram.lk

❖ **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

மொழி என்பது பேசுவோரின் குரலில் பிறந்து பொருளுடைய அறிகுறிகளாக அமைந்து கேட்போரால் பொருள் உணரப்படும் ஒலிவகை எனலாம். அது பெரும்பாலும் பேசுவோர், கேட்போர் ஆகிய இருதிறத்தார்க்கு இடையே நிகழ்ந்து ஒருவர் உணர்ச்சியையோ கருத்தையோ மற்றவர் உணர்வதற்குப் பயன்படுகிறது. பேசுவோரின் மூளையில் ஓர் எண்ணம் எழுகிறது. கேட்போரின் மூளை அதை உணர்ந்து கொள்கிறது. பேசுவோர் கேட்போர் ஆகிய இருவர்க்கு இடையே இருவரின் உடல் நரம்புகளுக்கு இடையே மூளைகள் உறவுகொள்ளத்தக்க தொடர்பை ஏற்படுத்துவதே மொழிமுதற் காரணமான ஒலி.

இவ்வாறு பயன்படும் ஒலி ஒவ்வொரு மொழியினர்க்கும் ஒவ்வொரு வகையாக அமைகிறது. ஒவ்வொரு குழுவினர் கூடிப்பொதுவாக உணர்வதற்கு ஏற்றவாறு அந்த ஒலிவகை தொன்று தொட்டு அறிகுறிகளாக அமைந்து வழிவழியாக வளர்ந்து பயன்படுவதால் மொழிக்கு ஒரு வரலாறும் உளதாகின்றது. மொழி அல்லாதமற்ற ஒலிவகைகளுக்கு இத்தகைய வளர்ச்சியும் இல்லை வரலாறும் இல்லை.

பேசுவோர் ஒருவகை ஒலியைப் பேச கேட்போர்க்கு அது விளங்காமற் போகுமாயின் அவருடைய மொழி வேறு இவருடைய மொழி வேறு என்கின்றோம். எனவே பேசுவோரும் கேட்போரும் அறிந்து போற்றுமாறு பொதுவான தன்மைகளும் குறியீடுகளும் கொண்டு விளங்கும் போது அது ஒரு மொழி ஆகின்றது.

I. ஒலி எவ்வாறு பிறக்கின்றது?

II. மொழி என்பது பற்றி ஆசிரியரின் கருத்து யாது?

III. ஒலிக்கும் மொழிக்கும் இடையிலுள்ள தொடர்பு யாது?

IV. மொழிக்கு முதற்காரணமாக அமைவது எது?

V. ஒரு மொழி எவ்வாறு ஆகின்றது?

(2x6=12 புள்ளிகள்)

(13+12=25 புள்ளிகள்)

***03)* பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிவு செய்து *300 – 350* சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.**

அ) மனித மேம்பாடும் இலக்கியமும்

ஆ) சாதாரணதரக் கல்வியின் பின் மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினை

இ மொழியும் பண்பாடும்

ஈ) கழிவு முகாமைத்துவம்

உ) யாரையும் மதித்து வாழ். *(25 புள்ளிகள்)*

agaram.lk

## பகுதி II

*04)*

அ) சங்கமருவிய காலத்தில் தோன்றிய இலக்கியங்களை வகைப்படுத்திக் காட்டுக?

ஆ) சங்க கால இலக்கியப் பண்பிலிருந்து சங்கமருவிய கால இலக்கியப் பண்பு வேறுபடுமாற்றை விளக்குக?

இ) சங்கமருவிய காலம் காவியங்களின் தொடக்ககாலமாக அமையுமாற்றை விளக்குக?

(3x5=15 புள்ளிகள்)

*05)*

அ) விஜயநகர நாயக்கர் காலத்தில் தோன்றிய சிற்றிலக்கிய வடிவங்கள் யாவை?

ஆ) விஜயநகர நயக்கர் காலத்தில் தோன்றிய பொது மக்கட் சார்பான இலக்கியங்களை எடுத்துக் காட்டி அவற்றின் பண்புகளை விளக்குக?

இ) இக் காலத்தில் தோன்றிய தனிப்பாடல்கள் பற்றி கருத்துரைக்குக?

(3x5=15 புள்ளிகள்)

*06)*

அ) ஐரோப்பியர் வருகைக்கு முந்திய இலங்கைத் தமிழ் இலக்கிய வளர்ச்சி பற்றிச் சுருக்கமாக விளக்குக?

ஆ) ஒல்லாந்தர் காலப்பகுதியில் தோன்றிய இலக்கியங்களை வகைப்படுத்தி காட்டுக?

இ) அவற்றின் பண்புகளை எடுத்து விளக்குக? (3x5=15 புள்ளிகள்)

07) மேல்வருவோருள் யாரேனும் இருவர் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றிய பங்களிப்பினை மதிப்பிடுக?

அ) பேராசிரியர் க. கைலாசபதி

ஆ) ஆறுமுக நாவலர்

இ) பேராசிரியர் ம.மு உவைஸ்

ஈ) எஸ். பொன்னுத்துரை

(2x71/2=15 புள்ளிகள்)

08) அ)

I. பின்வரும் வாக்கியத்திலுள்ள பொருள் மயக்கத்தை இனங்கண்டு திருத்தி எழுதுக?
நன்குரு நாதருடன் பேசிய பின் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்திருந்த சீடன் மீண்டும் புத்துணர்வு பெறற்றான்

II. பின்வரும் வாக்யத்திலுள்ள வழுவைச் சுட்டிக் காட்டி வழுவற்ற முறையில் அதனைத் திருத்தி எழுதுக?
விளம்பரங்களில் உண்மையை மட்டுமே சொல்லப்பட வேண்டும்

III. பின்வரும் வாக்கியங்களை செய்து எச்சத்தைப் பயன்படுத்தி இணைக்குக?
1. நான் காலையில் எழுந்து கடைத்தெருவுக்குப் பேனேன்
2. நான் தமிழ்ப் பத்திரிகைகள் எல்லாவற்றையும் வாங்கினேன்
3. அங்கேயே நான் தலைப்புச் செய்திகளைப் படித்து முடித்தேன்
4. பின்னர் வீடு திரும்பினேன்

IV. பின்வரும் வினைமுற்றுக்களின் வினையடிகளை எடுத்துக் காட்டுக?
செத்தேன், தந்தார், கண்டான், விற்றார்கள்

V. கிளி + கூடு, பசு + பால் என்பன இயல்பாகவும் விகாரப்பட்டும் புணர்வதற்கு ஒவ்வொரு உதாரண வாக்கியம் தருக? (5x2=10 புள்ளிகள்)

ஆ) பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று பற்றி சிறுகுறிப்பு எழுதுக?

I. குற்றியலுகரம்

II. விளிவேற்றுமை

III. அகப்புணர்ச்சி (5 புள்ளிகள்)

(10+5=15 புள்ளிகள்)

agaram.lk